மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.201/2011</u>

2026ம் ஆண்டு ஜனவரி 23ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோகரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>23.01.2026 பி.வா.சா.5 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்துக்கள் முழுவதும் நத்தக்காடையூர் கிராமத்திற்கு கட்டுப்பட்ட சொத்துக்கள். எனது தாத்தா நல்ல முத்து மகன் நாச்சிமுத்து கவுண்டர் என்பவர் தாவா சொத்தில் 1971 ஆம் ஆண்டு கிரயம் வாங்கினார். அவர் மட்டும் சொத்தை தனியாக கிரயம் வாங்கினாரா என்றால் இல்லை சென்னிமலை கவுண்டர் மற்றும் இரண்டு பொன்னுச்சாமி கவுண்டர் ஆகியோரோடு சேர்ந்து கூட்டாக கிரயம் வாங்கினார் நான்கு பேரும் சேர்ந்து மொத்தம் எத்தனை ஏக்கர் நிலத்தை கிரயம் வாங்கினார் என்றால் மொத்தம் 18.65 ஏக்கர் நிலத்தை கிரயம் வாங்கினார்கள் அதில் என் தாத்தாவிற்கு 4 ல் 1 பங்கு நிலங்கள் பாத்தியம்.

2. தற்போது என் தாத்தா இறந்துவிட்டார் என் தாத்தாவிற்கு இரண்டு மகன்கள் ஒருவர் என் தகப்பனார் பொன்னுசாமி மற்றொருவர் என்

சித்தப்பா கோவிந்தசாமி. என் தாத்தா கிரையம் வாங்கிய ஆவணத்தின் அடிப்படையில் என் தகப்பனாருக்கு அந்த சொத்துக்களை எட்டில் ஒரு பங்கும் என் சித்தப்பாவிற்கு எட்டில் ஒரு பங்கும் பாகம் உள்ளது என் சித்தப்பாவிற்கு பாத்தியப்பட்ட எட்டில் ஒரு பாக சொத்தை என் சித்தப்பா 18ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்து விட்டார். எந்த வருடம் கிரயம் கொடுத்தார் என்றால் 2010 ஆம் ஆண்டு கிரயம் கொடுத்தார். என் சித்தப்பா அவரது பாகத்தை பொதுவில் எனக்கண்டு தான் 18ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் தாவா சொத்துக்களில் எங்களுக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 33 சென்ட் பூமியை நாங்கள் கூட்டாக பொதுவில் வைத்து தான் அனுபவம் செய்து வருகிறோம்.

3. அந்த பூமிகள் மொத்த விஸ்தீரனமான 93-1/4 ஏக்கர் பூமிகளுக்கு தான் கட்டுப்பட்டதா என்றால் ஆமாம். மொத்த விஸ்தீரணத்தில் தான் என் தாத்தா 18 ஏக்கர் 65 சென்ட் பூமியில் பொதுவில் கிரையம் பெற்றார் என்றால் ஆமாம். பொன்னுசாமி மற்றும் குழந்தைசாமி ஆகிய வாதிகள் தாவா சொத்துக்களை எப்போது கிரயம் வாங்கினார்கள் என்றால் 1974 இல் கிரயம் வாங்கினார்கள் தாவா சொத்துக்களில் வாதி குடும்பத்திற்கு எவ்வளவு பாத்தியம் உள்ளது என்றால் 14 ஏக்கர் பாத்தியம் உள்ளது வாதிகளின் சொத்துக்கள் மொத்த விஸ்தீரணமான 93-¼ ஏக்கர் பூமிகளுக்கு தான் கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

4. தாவா சொத்துக்களை பொறுத்து இதுவரை பாகஸ்தர்களுக்குள் வாய்மொழியாகவோ ஆவணப்பூர்வமாகவோ பாகப்பிரிவினை ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துகளில் எங்களுக்கு உண்டான விகிதாச்சார சொத்துக்களை பாகம் பிரித்து எங்களுக்கு கொடுப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை

என்றால் சரிதான். வாதிகளுக்கு உண்டான விகிதாச்சாரத்தை அவர்களுக்கு பாகம் பிரித்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.23 18:16:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்